# வெளிப்படுத்தின புத்தகத்தில் ஏழு சபைகள்

## அறிமுகம்

- நான்கு முறை ஆசிரியர் தன்னை யோவான் என அடையாளப்படுத்துகிறார் (1:1, 4, 9; 22: 8)
  - ➢ அவர் கடைசியாக உயிர் வாழ்ந்த அப்போஸ்தலராகவும் வயதானவராகவும் இருந்தார்.
- இந்த புஸ்தகம் முதல் நூற்றாண்டில் ஏறக்குறைய கி.பி 95–96ல் எழுதப்பட்டது

➢ யோவான் நற்செய்தி அறிவித்ததின் நிமித்தமாக ரோமானிய பேரரசர் 'டொமிஷியன்' பத்மு என்னும் தீவிலே நாடுகடத்தினான்(1: 9). வரலாறு சொல்லுகிறது: யோவானுக்கு அனேக தண்டனைகள் கொடுத்தபோதும் அவைகள் எல்லாவற்றிலும் இருந்து கர்த்தர் அவரை தப்பித்தார் ஆகவே, கடைசியாக ரோமானிய பேரரசர் 'டொமிஷியன்' ஆள் நடமாட்டம் இல்லாத பத்மு என்னும் தீவிலே நாடு கடத்தினான்

- பத்மு தீவிலே இருந்தபோது, யோவான் தரிசனங்களைப் பெற்றார், தேவன் அவற்றை எழுதச்சொன்னார் (1:19).

➢ பாடுகள் என்பது ஒரு போதும் நமக்கும் தேவனுக்கும் இடையே உள்ள உறவை துண்டித்து விடாது. பாடுகள் மத்தியில் அநேக தேவபிள்ளைகள் கர்த்தரோடு கூட நெருங்கி இருந்ததை பார்க்கிறோம். இங்கே யோவான் தரிசனத்தை கண்டான். அப்போஸ்தலனாகிய பவுல் சிறைச்சாலையில் இருந்த பொழுது நான்கு நூல்களை எழுதினார் என்று பார்க்கிறோம். அது சிறைச்சாலை நிருபம் என்று அழைக்கப்படுகிறது. ஆக கிறிஸ்தவர்களாகிய நமக்கு பாடுகள் என்பது தேவனை விட்டு தூரம் போவதற்கு அல்ல இன்னும் தேவனோடு நெருங்கி இருப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொண்டு, சோர்ந்துபோகாமல் அதற்கேற்ப வாழவேண்டும்.

- எபேசஸிலிருந்து 60 மைல் தொலைவில் அமைந்துள்ளது இந்த பத்மு என்னும் சிறிய தீவு.

## பெறுநர்கள்

ஆசியா மாகாணத்தில் அமைந்துள்ள ஏழு சபையின் விசுவாசிகளுக்கு. எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா (1:11).

## எழுதப்பட்ட நோக்கம்

- எதிரியை வெல்ல விசுவாசிகளுக்கு அதிகாரம் அளித்தல்.
- தேவனுடைய ஜனங்களை வெற்றியின் பாதையில் எழுப்பவும்
- அவர்களை வலிமையாக்கவும் எழுதப்பட்டது.

நம்முடைய முகமூடியை கழற்றும்போது, கிறிஸ்துவின் வருகைக்கு இன்றைய சபையானது (தனி நபரும்) தயாராக இல்லை என்பதைக் காண்கிறோம். அதனால்தான் கிறிஸ்து மீண்டும் தம்முடைய ஜனங்கள் மத்தியில் இருந்து மணவாட்டியாகிய சபையை மணவாளனாகிய கிறிஸ்துவின் வருகைக்குத் தயார்படுத்துகிறார்.

இயேசு நம்முடைய பலங்களையும் பலவீனங்களையும் அறிவார். இந்த சபைகள் ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்பட்ட செய்திகளை நாங்கள் படிக்கும்போது, தேவனுடைய ஆவியானவர் உங்களுக்கு என்ன சொல்கிறார் என்பதைக் கேட்க உங்கள் செவியையும் இருதயத்தையும் திறந்து வைத்துக்கொண்டு, உங்கள் வாழ்க்கையில் சரி செய்யப்பட வேண்டிய காரியங்கள் ஏதாகிலும் இருக்குமானால் சரிசெய்துகொள்ள உங்களை ஒப்புக்கொடுங்கள்.

## A. எபேசு சபை – அன்பை இழந்த சபை (2:1–7)

### 1. எபேசு நகரம்

- ரோமுக்கு அடுத்தபடியாக, எபேசு மிக முக்கியமான நகரமாக இருந்தது.
- மிக முக்கியமான துறைமுக நகரமாக இருந்தது.
- வர்த்தகம், மதம் மற்றும் அரசியலுக்கான மையமாக முக்கியமானது.

அங்கு இரண்டு பெரிய அதிசயங்கள் இருந்தன

- ➢ 50,000 இருக்கைகள் கொண்ட தியேட்டர்
- ➢ தீனாளின் கோயில் (அப் 19)

### 2. எபேசு சபைக்கு தன்னை வெளிப்படுத்தும் கர்த்தர்

எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் (2:1).

இங்கே ஒவ்வொரு சபையிலும் தூதனுக்கு என பயன்படுத்தப்பட்ட வார்த்தையானது இந்த சபையின் மூப்பருக்கு என்று பொருள்படும். ஏழு நட்சத்திரங்கள் மற்றும் ஏழு பொன் குத்துவிளக்குகள் என்பவைகள் ஏழு சபைகளாம் (1:20).

### 3. எபேசுவில் ஊழியம்

- பவுல் தனது இரண்டாவது பிரயாணத்தின்போது முதன்முதலாக எபேசுக்கு சென்றார், எருசலேமுக்குத் திரும்புவதற்கான அவசரத்தினால் அதிக நாள் அங்கே செலவிடவில்லை (அப் 18:19–21).
- தனது மூன்றாவது பிரயாணத்தின்போதுமீண்டும் வந்து, மூன்று ஆண்டுகள் அங்கேயே இருந்து ஊழியம் செய்தார் (அப் 19–20; வச.31).
- பின்பு அவர் தீமோத்தேயுவை எபேசுவுக்கு தனது பிரதிநிதியாக அனுப்புகிறதை காண்கிறோம் (1 தீமோ 1: 4).
- அப்பல்லோ கர்த்தருடைய காரியங்களை பிரசங்கித்து, விடாமுயற்சியுடன் போதித்தார் என்பதுவும் நாம் அறிந்த ஒன்றே! (அப் 18: 24,25)
- பவுலின் மரணத்திற்குப் பிறகு, அப்போஸ்தலனாகிய யோவான் எபேசுவில் தனது மரணம் வரை அங்கே தங்கியிருந்து அதை தலைமையகமாக்கினார்.

### 4. எபேசு சபையின் விசுவாசிகள்

ஒவ்வொரு சபைக்கும் தேவன் பேசும்போது அவர்களுடைய நல்ல காரியங்களை முதலில் சொல்வதை பார்க்கிறோம். இங்கே எபேசு சபையை பாராட்டுகிறார் ...(2: 2, 3).

- அவர்களின் கடின உழைப்பு
- பொறுமை
- அவர்களின் ஆன்மீக பகுத்தறிவு

எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் (1 தெச 5:21). நான் ஒரு அப்போஸ்தலன் என்று சொல்லிகொண்டுவரும் அனைவரையும் அவர்கள் ஏற்கவில்லை. அப்போஸ்தலரை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அவர்களுடைய செய்தியை தீர்மானிக்கிறார்கள். ஆக, எபேசு சபையானது தேவனுடைய வார்த்தையில் நன்கு அடித்தளமாக இருப்பதாக தெரிகிறது. காரணம் அவர்கள் பவுல், தீமோத்தேயு, அப்பல்லோ, யோவான் இவர்களால் போதிக்கப்பட்டு இருந்தார்கள்.

## 5. எபேசு சபைக்கான செய்தி

இவ்வளவு நற்காரியங்கள் அவர்களிடத்தில் காணப்பட்டிருந்தாலும் அவர்கள் தேவன் மீது வைத்திருந்த தங்களின் "ஆதி" அன்பை விட்டுவிட்டார்கள்.

கிறிஸ்தவன் என்பதற்கான அடையாளமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நேசிப்பதாகும் (யோவான் 14:21, 23; 1 கொரி. 16:22). ஆனால் இங்கு எபேசியர்களின் ஆர்வம் குறைந்துவிட்டது "அவர்களுடைய முதல் அன்பை விட்டுவிட்டு" தேவனைவிட அதிகமாக உலகத்தை அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர்.

எல்லாவற்றையும் விட இயேசுவை முன்னிலைப்படுத்துவதே நம்முடைய ஆதி அன்பாகும். இந்த அன்பு கணவன்–மனைவிக்குள் இருக்கக்கூடிய அன்போடு சம்பந்தப்பட்டதாகும்.

- மணப்பெண் திருமண உறுதிமொழிகளை எடுத்துக் கொள்ளும்போது, மற்ற அனைவரையும் கைவிட்டு தன்னை அவனுக்குக் கொடுப்பதாக அவள் உறுதியளிக்கிறாள்.
- புதிதாக திருமணமான ஒரு பெண் தனது கணவனை மிகவும் நேசிக்கிறாள், அவளுடைய வாழ்க்கையின் மையமாக கணவன் இருக்கிறான் என கருதுகிறாள். அவள் கணவன் மீது வைத்திருக்கும் அன்பின் காரணமாக, அவளுடைய சொந்த தேவைகள், ஆசைகள் மற்றும் லட்சியங்கள் உட்பட எல்லாவற்றிற்கும் மேலாக கணவனை முதலிடத்தில் வைக்கிறாள்.
- அவள் மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையே ஒரு சிறப்பு நெருக்கம் உள்ளது. அவனைப் பற்றி எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள அவள் ஏங்குகிறாள்.
- அவளுடைய உள்ளார்ந்த இரகசியங்களையும் விருப்பங்களையும் வெளிப்படுத்த அவள் இதயத்தைத் திறக்கிறாள்.
- அவர்கள் ஒருவருக்கொருவர் விலகி இருக்கும்போது, அவள் அவனுக்காக ஏங்குகிறாள், சீக்கிரமாக வீட்டிற்கு வந்து தன்னுடன் இருக்க வேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறாள்.

கிறிஸ்துவின் மீதான "இந்த அன்பின் நிமித்தமாகவே", சீஷர்கள் கிறிஸ்துவுக்காக தங்களை 100% கொடுக்க தயாராக இருந்தனர்.இந்த வகையான அன்புதான் கிறிஸ்துவைச் சேவிக்க அவர்களைத் தூண்டியது, கிறிஸ்துவின் காரணத்திற்காக தங்கள் உயிரைக் கொடுக்கத் தயாராக இருந்தது.அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம் (1 கொரி 13:8)

நாம் முற்றிலும் அவரை நேசிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் (யோவான் 21:15–17).முதல் மற்றும் பிரதான கட்டளை யாதெனில் "உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் நேசிப்பாயாக" என்பதுதானே (மத் 22:37–38).

இப்படிப்பட்ட ஆதி அன்பை இழப்பது என்பது ஒரே நாளில் நடக்கக் கூடிய காரியம் அல்ல; இது படிப்படியாக நடக்கக்கூடிய காரியமாகும். எபேசு சபையானது உலகத்தை நோக்கி பார்த்து கொஞ்சம் கொஞ்சமாக தேவனுடைய அன்பை விட்டு விலகி போனது போல இன்றைக்கு நாமும் உலகத்தையும் பாவத்தையும் பார்த்து கொஞ்சம் கொஞ்சமாக தேவனைவிட்டு விலகுகிறவர்களாக காணப்படுகிறோம்.

### 6. எச்சரிக்கை

நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக (2:5).

விழுந்தது ஒரு இடம் எழுந்திருப்பது மற்றொரு இடமாக இருக்கக்கூடாது எங்கே விழுந்தோம் என்பதை நினைத்து அந்த இடத்தில் நம்மை நாம் சரிசெய்து கொள்ளவேண்டும்.

### 7. நியாயத்தீர்ப்பு

இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்(2:5).

- நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து... நாம் மனம் திரும்பவேண்டும் என்கின்ற அவசரத்தையும் அவசியத்தையும் காட்டுகிறது.

தேவன் நம்மிடமிருந்து ஒளி கொடுக்கும் வாழ்க்கையை எதிர்பார்க்கிறார். இன்றைக்கு நாம் வெளிச்சம் கொடுப்பது போல நடித்துக்கொண்டிருக்கிறோம். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள் (2 தீமோ 3:5).

**நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய் (வெளிப்படுத்துதல் 2:6)**

- நிக்கொலாய் மற்றும் பிலேயாம் இரண்டு கொள்கைக்காரரும் ஒரே காரியத்தை வலியுறுத்துகின்றனர்.
- உருவ வழிபாடு மற்றும் மாம்ச விஷயங்கள் விசுவாசிகளுக்கு எதிராக ஒன்றும் செய்யாது என்று அவர்கள் நம்பினர்; ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவால் விடுவிக்கப்பட்டவர்கள்.
- நாம் தீமையை வெறுக்காமல் தேவனின் பார்வையில் ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடியாது.
- இந்நாட்களில் நாம் இயேசுவை நம் நிலைக்கு கொண்டு வருவதற்கு முயற்சி செய்கிறோம். அது தவறு நாம் அவருடைய நிலைக்கு நாம் செல்லவேண்டும்.
- இப்படிப்பட்ட போதனைகள் நாம் கடவுளாக இருக்கிறோம் என்கின்ற வகையில் போதிக்கிறது; இது மிகவும் ஆபத்தான போதனையாக இருக்கிறது.

### 8. வாக்குறுதி

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது (வெளி 2:7)

- ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; இது சத்தியத்தைப் கேட்ககூடிய இருதயத்தின் காது பற்றி பேசுகிறது.
- "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ" – யோவானின் கூற்றுப்படி ஒரு கிறிஸ்தவன் உலகத்தின் இச்சைகளிலிருந்து ஜெயிக்கிறவனாக இருக்கவேண்டும் (1 யோவான் 5:4 – தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்).
- ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன். இயேசுவே ஜீவவிருட்சம். உண்மையான விசுவாசிகள் பரலோக வாக்குறுதியை அனுபவிக்கிறார்கள் (வெளி 22:2; ஆதி. 2:9).

நாம் ஒரு விசுவாசியாக இருந்தால், நாம் மரித்தபின் நம் உடலை விட்டு ஆவி உடனடியாக சொர்க்கத்திற்குச் செல்லும். உடலானது உயிர்த்தெழுதலின்போது நம்

ஆவியுடன் மீண்டும் சேரும். ஜீவவிருட்சம் சொர்க்கத்தில் உள்ளது. பரதீசு என்பது சொர்க்கத்தில் உள்ள தோட்டம். இது ஏதேன் தோட்டத்தின் பரலோக மறுசீரமைப்பு ஆகும். பரலோகமானது, இன்னும் அற்புதமாக இருக்கும்.

## B. சிமிர்னா சபை – உபத்திரவப்பட்ட சபை (2: 8–11)

'சிமிர்னா' என்ற சொல் எபிரேய மொழியில் myrrh (மிரே) என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். இது வெள்ளைப்போளம் என்று அழைக்கப்படுகிற ஒரு வாசனை திரவியம் ஆகும் இது ஒரு வகையான நறுமண செடியை நசுக்குவதன் மூலம் எடுக்கப்படும் பிசின் ஆகும். இது வாசனை திரவியமாக உயிருள்ளவர்களுக்கும் (மத்தேயு 2:11– சாஸ்திரிகள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் 'வெள்ளைப்போளத்தையும்' அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்) இறந்தவர்களுக்கும் பயன்படுத்தப்பட்டது (யோவான் 19:39– நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்). மரணத்துடனான தொடர்போடு துன்பப்படும் சபையாக சிமிர்னா சபையை மிகச்சரியாக சித்தரித்து காட்டுகிறது. இந்த சிமிர்னா சபையானது உபத்திரவப்படுத்தப்பட்டு தேவனுக்கு முன்பாக உண்மையுள்ள ஒரு நறுமணம் கொடுக்ககூடிய சபையாக இருக்கிறது. அநேக சமயங்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் பாடுபடும்பொழுது அந்த பாடுகளை நினைத்து வருந்துகிறோம்; ஆனால் பாடுகள் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைபடுகிறது என்பதை மறந்து போகக் கூடாது.

**உபத்திரவத்தின் நோக்கம்...**

- பவுல் இப்படியாக எழுதுகிறார்: இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே (1 தெச 3: 3).
- யாக்கோபு சொல்லும்போது: உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று (சகிப்புத்தன்மையை) அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக்கோபு 1: 3)
- யோபு கூறுகிறார்: அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன். (யோபு 23:10)
- பேதுரு சொல்லுகிறார்: கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக (1 பேதுரு 5:10).
  - நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார் (1 பேதுரு 4:14).
  - ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் (1 பேதுரு 4:16).

1. <u>சிமிர்னா நகரம்</u>

- சிமிர்னா பட்டணம் எபேசுவுக்கு வடக்கே சுமார் 35 மைல் தொலைவில் அமைந்துள்ளது.
- சிமிர்னா ஆசியா மைனரில் ஒரு வசதியான மற்றும் அழகான வணிக நகரமாக இருந்தது.
- மன்னர்களை வழிபடும் மையமாக இருந்தது. கி.பி 29ல் 'திபேரியஸ்' பேரரசனாக இருந்தபோது இந்த ஆசியா மைனரிலிருந்த மக்கள் அவனுக்கு ஒரு கோவிலைக் கட்ட விரும்பினர்கள். அதை சிமிர்னா பட்டணம் செய்து முடித்திருந்தது.
- இன்று இது துருக்கியில் உள்ள 'இஸ்மிர்' என்கிற பட்டணமாக அழைக்கப்படுகிறது.
- இந்த சபையை ஆரம்பித்தது தொடர்பான எந்த ஒரு தகவலையும் வேதம் நமக்குத் தரவில்லை, அப்போஸ்தலர் புத்தகத்திலும் குறிப்பிடப்படவில்லை.

2. <u>சிமிர்னா சபையில் கிறிஸ்து எப்படிப்பட்டவராக இருக்கிறார்</u>

முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது...(2:8). முந்தினவர் என்று சொல்லும்போது கடந்த காலத்தையும், பிந்தினவர் என்று சொல்லும்போது எதிர்காலத்தையும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் என்று சொல்லும்போது நிகழ்காலத்தையும் குறிக்கிறது. ஆக, கர்த்தர் எல்லா காலத்துக்கும் தேவனாக இருக்கிறார்; அதுமட்டுமல்ல அவர் மரித்தும் பிழைத்திருக்கிறார் என்று சொல்லி இந்த சபையை உற்சாகப்படுத்துவதை பார்க்க முடியும். எபிரெய எழுத்தாளர் எழுதும்பொழுது 'இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்' என்று குறிப்பிடுகிறார். 'நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்' என்று தேவன் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

3. <u>சிமிர்னா சபையின் விசுவாசிகள்</u>

உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன் (2:9). கர்த்தர் அவர்களை பாராட்டுகிறார்...

- கிரியை – ஏற்கனவே எல்லா சபைக்கும் சொன்னதுபோல சொல்லுகிறார்.
- உபத்திரவம்
- வறுமை ( தரித்திரம்)

### a. அழுத்தங்கள் மூலமாக ஏற்பட்ட உபத்திரவம்

i. குடிமக்கள் அனைவரும் அரசனை வணங்கவேண்டும் அல்லது அவர்கள் மரணத்தை எதிர்கொள்வார்கள். ஆனால் சிமிர்னா சபையினரோ அதை மறுத்து அதற்கு எதிராக நின்றனர் – இது அவர்களுக்கு வெளியிலிருந்து வந்த அழுத்தம் (அரசியல் ரீதியாக).

ii. நற்செய்திக்கு எதிரான யூத மக்களிடமிருந்தும் அழுத்தம் வந்தது (மத ரீதியாக). "அவர்கள் வெளிப்புறமாக யூதர்கள் என்று சொன்னாலும், அவர்கள் உண்மையான யூதர்கள் அல்ல (ரோமர் 2:28 – புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல). அவர்கள் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் (ஆங்கிலத்தில் – சாத்தானின் ஜெப ஆலயம் என்று கூறப்பட்டுள்ளது). இவர்கள் மேசியாவை நிராகரித்ததன் மூலம், யூத மதம் சக்கரவர்த்தி வழிபாட்டைப் போலவே சாத்தானின் ஒரு கருவியாக மாறியது.

### b. வறுமையினால் ஏற்பட்ட உபத்திரவம்

இயேசு கிறிஸ்துவை விசுவாசித்ததினால் அவர்களின் வறுமை அதிகமானது. காரணம் எல்லாராலும் வெறுக்கப்பட்டனர். மக்கள் அவர்களிடமிருந்து பொருள் வாங்கவோ விற்கவோ விரும்பவில்லை ஆகவே அவர்களின் வணிகங்கள் (Businesses) மூடப்பட்டன. இதனால் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் சிரமப்பட்டார்கள் ஆனாலும் தங்களின் விசுவாசத்தை விட்டு விலகவில்லை.

### c. சிறைச்சாலையின் மூலம் ஏற்பட்ட உபத்திரவம்

அவர்கள் இன்னும் இதை எதிர்கொள்ளவில்லை, ஆனால் விரைவில் எதிர்கொள்ள நேரிடும். காரணம் ரோமானிய பேரரசரை வணங்கும்படி கட்டாயப்படுத்தும் நோக்கத்திற்காக அவர்கள் சிறையில் தள்ளப்படுவார்கள்.

"பத்து நாட்கள்" (வச.10) என்பது ரோமானியப் பேரரசர்களான நீரோ, டொமிஷியன், டிராஜன், மார்கஸ் ஆரேலியஸ், செவெரஸ், மாக்ஸ்சிமம், டெசியஸ், வலேரியன், ஆரேலியன் மற்றும் டியோக்லீடியன் ஆகியோரின் கீழ் இந்த சபையானது உபத்திரவங்களை சந்தித்து இருக்கலாம் என்றும், சிமிர்னா சபையானது "பத்து நாட்கள்" நீடித்த சில குறிப்பிடத்தக்க துன்புறுத்தல்களை சந்தித்தது என்றும் பொருள் கூறுகிறார்கள்.

இன்றைக்கு நம்முடைய சூழ்நிலைகள் நன்றாக இருக்கும்போது இயேசுவைப் பின்பற்றுவது மிகவும் எளிதானது. ஆனால் நமக்கு விரோதமான சூழ்நிலைகள், நமக்கு எதிரான பாடுகள், நம்முடைய வியாதி, வருத்தம், கண்ணீர் இவைகள் மத்தியிலே நாம் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக காணப்படுகிறோமா? கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பாடுகள் உள்ள வாழ்க்கை. அதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

4. <u>இந்த உபத்திரவத்திற்க்கான தீர்வு – கிறிஸ்துவின் மீதுள்ள நமது நம்பிக்கையே!</u>

உபத்திரவத்தை எப்படி மேற்கொள்ளவேண்டும் என்பதை குறித்து வேதத்தில் அநேக இடங்களில் வாசிக்கிறோம். இங்கு சிமிர்னா சபைக்கு இரண்டு காரியங்களை குறித்து குறிப்பிடுகிறார்.

i. <u>நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே.</u>

நாம் பயந்தால் தேவனை நம்பவில்லை என்று அர்த்தம்.

- உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் (லூக்கா 12:7).
- ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத் 10:28).
    - ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவி (மத் 10:29)
    - இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவி (லூக்கா 12:6).

இந்த இரண்டு சம்பவத்திலேயும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அடைக்கலான் குருவியை உதாரணமாக வைத்து பேசுகிறார். தேவனுடைய சித்தம் இல்லாமல் ஒன்றாகிலும் கீழே விழாது; ஆகவே பயப்படாதீர்கள் என்று சொல்லுகிறார்.

ii. நீ மரணபரியந்தம் உண்மையாயிரு.

இந்த கடிதம் எழுதப்பட்டபோது சிமிர்னா சபையில் போதகராக 'பாலிகார்ப்' என்பவர் இருந்தார். கி.பி 156 இல் இந்த சபையின் முதல் இரத்த சாட்சியாக மரித்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. யூதர்கள் அவரைப் பிடித்தபோது, அவர் ஓடவில்லை. அவர்கள் அவரை கிறிஸ்துவின் மீது வைத்திருக்கும் அவரது நம்பிக்கையைத் மறுதலிக்கும்படியாக அவரை மீண்டும் மீண்டும் வற்புறுத்தினர். உனக்கு உயிர் வேண்டுமானால் ரோம சக்கரவர்த்தியான 'சீசர்' தான் கடவுள் என்று சொல் என்று சொன்னார்கள் ஆனால் அவரோ: "86 ஆண்டுகளாக நான் கிறிஸ்துவுக்கு சேவை செய்தேன், அவர் எனக்கு எந்த தவறும் செய்யவில்லை. அப்படியிருக்க நான் என் இராஜாவும், என் இரட்சகராகவும் இருக்கிற அவரை எப்படி நிந்திக்க முடியும்?" என்றார். அவரை வெறுத்த யூதர்கள் அவரை ஒரு கம்பத்தில் ஆணியடித்து நெருப்பிலிட்டு கொளுத்தவேண்டும் என்பதற்காக விறகு சேகரித்தனர். ஆனால் அவரோ நீங்கள் என்னை ஆணியடிக்க தேவையில்லை; கட்டவும் தேவையில்லை என்று சொன்னார். அவர்கள் நெருப்பை மூட்டினர், ஆனால் அந்த சமயத்தில் பலத்த காற்றடித்தபடியினால் அந்த நெருப்பானது அணைந்துபோனது. இறுதியாக, வீரர்களில் ஒருவன் தனது வாளை எடுத்து 'பாலிகார்ப்' உடலில் குத்த அவர் தன் வாழ்க்கையை முடித்தார். அவர் மரித்ததற்கான ஒரே காரணம்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை.

இந்த சபையை குறித்து தேவன் எந்த ஒரு குறையும் வெளிப்படுத்தவில்லை; அவர்கள் பாடுகளை கடந்து செல்லப்போகிறார்கள்; சிறைவாசம், மரணம் இவைகளெல்லாம் அவர்களுக்கு நேரிடும் என்பதை அவர் அறிந்து பயப்படாதே! தைரியமாயிரு!! உண்மையாயிரு!!! என்று குறிப்பிடுகிறார்.

5. பிரதிபலன்

i. ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் (வச.10).

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் (யாக்கோபு 1:12).

பவுல் சொல்லும்போது: நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோ 4:7,8).

ii. ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை (வச.11)

நாம் நம்முடைய சரீர மரணத்தைக் குறித்து பயப்படவேண்டிய அவசியம் இல்லை அது எல்லாருக்கும் கட்டாயம் நடைபெறும். ஆனால், இரண்டாம் மரணம் மிகவும் கொடியது அதிலிருந்து நாம் தப்புவிக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவனோடு கூட நித்தியமான ஒரு வாழ்க்கை வாழக்கூடிய அதிகாரத்தை பெற்றிருக்கிறோம் அதை நினைத்து எந்த உபத்திரவத்தையும் சகித்து நித்திய வாழ்க்கைக்காக நாம் காத்திருப்போம்.

ஒருவேளை இதுவரை நீங்கள் இந்த கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதிருந்தால் அவர் சிலுவையில் மரித்தது உங்கள் பாவத்திற்காக என்பதை அறிந்து அவரை விசுவாசித்தால் உங்களுக்கு சரீர மரணம் ஏற்படுமே தவிர இரண்டாம் மரணமாகிய நரகம் என்பது உங்களுக்கு

ஏற்படுவதில்லை. ஆகவே உங்களை அவருக்கு அர்ப்பணியுங்கள் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

## C. பெர்கமு சபை – ஒத்துப்போகிற சபை (2:12–17)

### 1. பெர்கமு பட்டணம்

- பெர்கமு சிமிர்னாவிற்கு வடக்கே சுமார் அறுபது மைல் தொலைவில் அமைந்துள்ளது.
- பெர்கமு என்பதற்கு திருமணம் என்பது பொருள்.
- இது ஒரு கல்வியின் மையமாக இருந்தது. சிறந்த நூலகங்களும் உலகக் கல்வி கற்பதற்கான இடங்களும் இருந்தன.
- பெர்கமு நகரமானது கலாச்சாரம், கப்பல் போக்குவரத்து, வணிகம், கல்வி, அறிவியல் மற்றும் மருத்துவம் ஆகியவற்றில் பிரபலமானது.
- இது மிக முக்கியமான நான்கு புற வழிபாட்டு முறைகளுக்கும் மையமாக இருந்தது (ஜீயஸ், ஏதீன், டியோனீசஸ் மற்றும் அஸ்கெல்பியஸ்).
    - ➢ பெர்கமுவில் உள்ள அக்ரோபோலிஸில் ஜீயஸுக்கு ஒரு பெரிய, சிம்மாசன வடிவ பலிபீடம் இருந்தது. இயேசு இந்த நகரத்தை "சாத்தானின் இருக்கை" என்று அழைக்கிறார் (2:13).
    - ➢ பாம்பு வடிவம் கொண்ட குணப்படுத்தும் கடவுளான அஸ்கெல்பியஸ் பெர்கமுடன் மிகவும் தொடர்புடையதாக இருக்கிறது. பாம்பு போன்ற வடிவம் இன்றும் மருத்துவ அடையாளமாக உள்ளது.
    - ➢ வியாதிபட்டவருக்கான ஒரு சிறப்பு மருந்து: வியாதிப்பட்டவரை கோவில் தரையில் தூங்குமாறு அனுமதித்து, பாம்புகளை குணப்படுத்தும் சக்தியுடன் அவரது உடலில் ஊர்ந்து செல்ல அனுமதிப்பதாகும்.

### 2. பெர்கமு சபையில் கிறிஸ்து

- இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் (2:12). பட்டயம் என்பது வேதவசனத்தை குறிக்கிறது.
- தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் இருக்கிறது (எபி 4:12)
- அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது (வெளி 1:16). கர்த்தர் இன்றைக்கும் சபையின் நடுவில் வேதவசனத்தின் மூலமாக பேசக்கூடியவராக இருக்கிறார். காதுள்ளவன் அவருடைய வார்த்தையை கேட்கக்கடவன்.

### 3. பெர்கமுவின் விசுவாசிகள்

- உன் கிரியைகளையும்,
- சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும்
- நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும்,
- சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன் (2:13).

அவர்களுடைய கிரியைகள் மற்றும் அவர்கள் குடியிருக்கிற இடம் மேலும் ஆண்டவர் மீது அவர்கள் வைத்திருக்கிற விசுவாசம் இவைகள் எல்லாவற்றையும் கர்த்தர் அறிந்திருக்கிறதாக குறிப்பிடுகிறார்.

அந்திப்பா என்னும் ஒரு நபரை இங்கே குறிப்பிடுகிறார். அந்திப்பா ஒரு சாதாரண விசுவாசிதான். அந்திப்பா என்பதின் பொருள் "அநேகருக்கு எதிராக தனியாக நிற்கும் ஒருவர்" என்பதாகும். கிறிஸ்துவின் நிமித்தம் உள்ள சாட்சியின் நிமித்தமாக கொல்லப்பட்டான். கிறிஸ்துவின் விரோதிகள் அவனை ஒரு உலோகத்தால் செய்யப்பட்ட எருதுக்குள் செலுத்தி அந்த உலகத்தை சூடுபடுத்தி அவனைக் கொலைசெய்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஒரு உண்மையுள்ள சாட்சியாக கிறிஸ்துவை மறுதலியாமல் கிறிஸ்துவின் மீதிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தினான். அந்த நாட்களில் அவன் மட்டுமல்ல அந்த திருச்சபை முழுவதுமாக கிறிஸ்துவை மறுதலிக்காமல் உறுதியாய் இருந்தார்கள்.

இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலைகளிலும் கிறிஸ்துவை மறுதலியாமல் தைரியமாக இருந்தாலும் அவர்களிடத்திலே இருந்த குறையையும் ஆண்டவர் சுட்டிக்காண்பிக்கிறார்.

4. <u>பெர்கமு விசுவாசிகளின் பாவம்</u>

- பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு (வெளி 2:14)
- நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு (வெளி 2:15).

உலகத்திற்கு சாட்சியாக ஒரு கூட்டம் சபைக்குள் இருந்தாலும் உலகத்தோடு ஒத்துப்போகிற சிலரும் காணப்பட்டார்கள். சபைக்குள் "பிலேயாம் மற்றும் நிக்கொலாய் மதஸ்தர் கோட்பாட்டை" கடைப்பிடித்தவர்களை கர்த்தர் கண்டித்தார்.

பிலேயாம் மற்றும் நிக்கொலாய் மதஸ்தர்களின் கொள்கை: விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும், வேசித்தனம்பண்ணுவதற்கும் வழிவகுப்பவர்கள்.

நாம் எப்போது உலகத்தோடு ஒத்து போகிறோமோ அப்பொழுது அவர்களுடைய பழக்கவழக்கங்களையும் நாம் பின்பற்றுகிறவர்களாக காணப்படுவோம். உலகத்தோடு ஒத்துப்போகிற ஒரு சின்ன காரியமாக இருந்தாலும் அது ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிக்கக் கூடியதாக இருக்கும்.

மோவாபின் ராஜாவான பாலாக் கொடுத்த பணத்திற்காக இஸ்ரவேலை சபிப்பதற்கு பிலேயாம் சென்றான். அது கை கூடாத பட்சத்தில் தனது தீர்க்கதரிசன வரத்தை தவறான வழியில் பயன்படுத்தினான். மோவாபியப் பெண்கள் இஸ்ரவேல் ஆண்களை திருமணம் செய்வதற்கான ஒரு சதித்திட்டத்தை வகுத்தார். இதன் விளைவாக இஸ்ரவேல் ஜனங்களிடம் வேசித்தனம் மற்றும் விக்கிரகாராதனை ஒன்றிணைந்தது (எண் 22–25 அத்தியாயங்கள்). இதனால் கர்த்தருடைய தீர்க்கதரிசியாக இருந்த பிலேயாம் குறிசொல்லுகிறவனாக மாறிபோனான். கடைசியில் பிலேயாம் இஸ்ரவேலர்களால் கொல்லப்பட்டான் (எண் 31:8; யோசுவா 13:22)

நிக்கொலாய் மதஸ்தரை குறித்து சொல்லும்போது: "நிக்கோலாய்டன்" என்ற சொல் இரண்டு கிரேக்க சொற்களிலிருந்து வந்தது, ஒன்று (to conquer) "மேற்கொள்வது" என்றும், மற்றொன்று (the laity) "பாமரமக்கள்" என்றும் பொருள்படும். இந்தக் கொள்கையானது ஒருவருக்கொருவர் சேவை செய்வது என்பது பற்றிய கிறிஸ்துவின் கட்டளைக்கு மாறானது

(மத் 23: 8–9). இது பாமர மக்களை ஒடுக்கி அதிகாரம் செலுத்துவதற்கு அடையாளமாக இருக்கிறது. இரட்சிக்கப்பட்டிருப்பதினால் விக்கிரக ஆராதனையோ அல்லது மாம்சத்திற்குரிய காரியங்களோ ஒரு விசுவாசியை பாதிக்காது என்பது இவர்களுடைய எண்ணம்.

- விக்கிரகங்களுக்குப்படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் சபைகளுக்கு கடிதம் எழுதுவதை வாசிக்கிறோம் (அப் 15:28)

5. சபைக்கான எச்சரிக்கை

நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன் (வெளி 2:16).

விசுவாசிகள் தங்கள் வழிகளை மாற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மனந்திரும்புதல் என்றால் உண்மையிலேயே பாவத்திற்காக வருந்துவதும் அதிலிருந்து விலகி தேவனோடு புதிய திசையில் செல்வதாகும்.

பட்டயம் என்பது அவருடைய வார்த்தை. தேவனுடைய வார்த்தையை விட வல்லமை வாய்ந்தது எதுவும் இல்லை. தவறான உபதேசத்திற்கு வேத வசனத்தின் மூலமாக மட்டுமே தீர்வு காணமுடியும்.

இந்த உலகத்தின் எந்த பகுதியோடு நாம் ஒத்துப் போகிறோம் என்பதை உணர்ந்து மனம் திரும்ப வேண்டியது அவசியம். இல்லையெனில் வேத வசனம் நம்மை நியாயம் தீர்க்கக்கூடியதாக இருக்கிறது.

6. பிரதிபலன்

- ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது (வெளி 2:17).

**மறைவான மன்னா.**

இஸ்ரவேல் ஜனங்கள் மன்னாவைப் பெற்றதைப் போலவே (யாத்திராகமம் 16: 14–15), உண்மையான விசுவாசிக்கு ஆன்மீக மன்னாவை கொடுப்பதாக தேவன் வாக்குறுதி அளிக்கிறார் (யோவான் 6:51).

**வெண்மையான குறிக்கல்**

பெரும்பாலானவர்கள் இது ஒரு வைரம் (வெள்ளை) என்று நினைக்கிறார்கள். பிரதான ஆசாரியனின் இதயத்திற்கு அருகே தேவனின் பெயரை பொறித்திருக்கிற கல்லாக இருக்கலாம். இந்த "வெள்ளைக் கல்" விளையாட்டுகளில் ஒரு தடகள வீரர் வென்றால், அவருக்கு பரிசின் ஒரு பகுதியாக, பெரும்பாலும் வழங்கப்பட்டது. அதுபோலவே ஜெயம்கொள்ளுகிறவன் பரலோகத்தில் செல்வதற்கும் அங்கே தனது நித்திய வெற்றியின் கொண்டாட்டத்திற்கும் உபயோகிக்கிற பயணச்சீட்டாக இருக்கலாம்.

**"புதிய பெயர்":** கிறிஸ்துவை நேசிப்பவர்களுக்கு அவரிடமிருந்து வரும் ஒரு தனிப்பட்ட செய்தி இது. அந்த கல்லில் எழுதப்பட்டிருக்கிற பெயரானது அதை பெற்றுக்கொள்ளுகிறவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

## D. தியத்தீரா சபை – கறைபடிந்த சபை (வெளி 2:18–29)

### 1. தியத்தீரா நகரம்

- தியத்தீரா நகரம் ஒரு முக்கியமான வர்த்தக மையமாக இருந்தது
- இது பெர்கமுவிற்கு தென்கிழக்கில் சுமார் 40 மைல் தொலைவில் அமைந்துள்ளது.
- இந்த பட்டணத்திற்கு இயற்கையான பாதுகாப்பு எதுவும் இல்லை; ஆதலால் அநேகமுறை இது அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்ட ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்தது.
- அப்போஸ்தலர் 16ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'லீதியாள்' என்பவள் இந்த பட்டணத்தை சார்ந்தவள் என்பது குறிப்பிடத்தக்கது.

### 2. தியத்தீரா சபையில் கிறிஸ்து (வெளி 2:18)

"அக்கினிஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம்போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன்" என்று கிறிஸ்து தியத்தீராசபைக்கு தன்னை வெளிப்படுத்துகிறார். அக்கினிஜுவாலை மற்றும் வெண்கலம் ஆகியவை நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாக இருக்கிறது.

### 3. தியத்தீராவின் விசுவாசிகள் (வெளி 2:18)

உன் கிரியைகளையும் உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்புசெய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் .

- தியத்தீரா சபையின் கிரியைகளுக்காக இயேசு அவர்களை பாராட்டுகிறார். அவர்கள் முன்பு செய்த கிரியைகளிலும் பின்புசெய்த கிரியைகள் அதிகமாயிருந்தது.
- இது ஒரு அன்பான சபை; மட்டுமல்ல சேவை மனப்பான்மையுள்ள சபை
- தேவன் மீது அவர்களுக்கு இருந்த விசுவாசம் மற்றும் அவர்களுக்கு இருந்த பொறுமை ஆகியவற்றை ஆண்டவர் இயேசு பாராட்டுகிறார். அநேக உபத்திரவத்தின் ஊடாக இவர்கள் கடந்து செல்லும் போது அவர்களுடைய விசுவாசம் அவர்களுக்கு பொறுமையை கொண்டு வந்தது.
- விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று யாக்கோபு 1:3ல் வாசிக்கிறோம். அதுமட்டுமல்லாது அவர்களுடைய விசுவாசம் கிரியையில் காண்பிக்கப்பட்டது. கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது என்று யாக்கோபு 2:20ல் பார்க்கிறோம்.

மற்ற சபைகளை பாராட்டியதைவிட இந்த சபையை குறித்து அதிகமாக அவர் பாராட்டி பேசுகிறார்.

### 4. தியத்தீராவின் பாவம் (வெளி 2:20)

ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு; தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்.

- ஆகாபின் ராஜாவின் மனைவியான யேசபேல், தனது வல்லமையை நிலைநாட்ட, நேர்மையற்ற வழிமுறைகளைக் கைக்கொண்டு விக்கிரகாராதனைக்கு முக்கியத்துவம்

கொடுத்தவள். அவளுடைய நாட்களில் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் அதிகமாக பாதிக்கப்பட்டார்கள்.

- இங்கே யேசபேல் தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிறாள்.

'யேசபேல் என்னும் ஸ்திரீயானவள்' என்பது நேரடியாக யேசபேல் என்னும் பெண்ணை குறிப்பிடாமல் தவறான உபதேசத்தை உபதேசிக்கிற ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி அவர்களுடைய கள்ளப்போதனையின் ஆவியை குறிக்கிறது.

பெர்கமு சபையில் காணப்பட்ட அதே பாவம் (விக்கிரக ஆராதனை மற்றும் விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டதை புசிப்பது) தியத்தீரா சபையிலும் காணப்பட்டது.

நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய் (வச.20). அப்போஸ்தலனாகிய யோவான் நாட்களில் சபை உறுப்பினர்களின் வசதிக்காக சபையில் இப்படிப்பட்ட தீமையான பழக்கமுடைய பெண்கள் வேலையில் அமர்த்தப்பட்டார்கள்.

இந்நாட்களிலும், சாத்தானின் சபைகள் ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் என்கின்ற ஓரினச்சேர்க்கையை ஊக்குவிக்கின்றன. இது தேவனுக்கு அருவருப்பானவை என்று வேதம் கூறுகிறது (லேவியராகமம் 18:22).

இந்த "யேசபேலுக்கு" மனந்திரும்ப சமயம் கொடுக்கப்பட்டது, ஆனால் அவள் மறுத்துவிட்டாள் (வெளி 2:21). இன்றைக்கும் அநேக சபைகளுக்கு தேவன் எச்சரிப்பைக் கொடுக்கிறார்; ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும் இந்த எச்சரிப்பு பொருந்தகூடியதாக இருக்கிறது. ஆனால் அதை உதாசீனப்படுத்தும் சபைகளும் தனி மனிதர்களும் எத்தனை பேர்.

ஆவிக்குரிய விபச்சாரத்திற்கு இடம் கொடுத்து ஒழுக்கக்கேடான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த இந்த சபைக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நியாயத்தீர்ப்பின் எச்சரிப்பை கொடுக்கிறார்.

### 5. தியத்தீரா சபைக்கான எச்சரிக்கை

**a. "அவளைக் கட்டில்கிடையாக்கி" ...**

இது பாவத்திற்கான தண்டனையாகவும் பாவம் செய்த மற்றவர்கள் மனம்திரும்புவதற்கான ஒரு எச்சரிக்கையாகவும் இருக்கிறது (2:22).

**b. "அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்"**

யோவான் இந்த கடிதத்தை எழுதியபோது சபைக்கு சுமார் 40 வயது, (அவளுடைய) தவறான போதனை இரண்டாம் தலைமுறையை உருவாக்கிவிட்டது (2:23).

நியாயத்தீர்ப்பு முதலில் சபையில் துவங்க கூடியதாக இருக்கிறது (அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்). ஒவ்வொரு மனிதனுடைய இதயத்தை பற்றியும் தேவன் ஆராய்ந்து அறிந்திருக்கிறார்; அவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது.

- நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர் (சங் 7:9)
- இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? (நீதி 24:12)
- உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதியே (எரே 11:20)
- இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன் (எரே 17:10)

c. **உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன் (2:23)**

- மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் (20:12).
- யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள் (20:13).

நம்முடைய கிரியைகளினால் நாம் இரட்சிக்கப்படுவது இல்லை (எபே 2: 8–9), ஆனால் நாம் இரட்சிக்கப்பட்டதற்கான சான்று நம்முடைய கிரியையாக இருக்கிறது (யாக்கோபு 2: 14–26).

d. **"சாத்தானின் ஆழம்" (2:24)**

ஆவிக்கு தீங்கு விளைவிக்காமல் நாம் பாவம் செய்யலாம் அதாவது சரீரம் தீட்டுப்பட்டால் பரவாயில்லை என்பதே இந்த போதனை ஆகும். இது முற்றிலும் தவறானது. இயேசு நம்முடைய பாவங்களை மன்னிக்கிறவர்தான், ஆனால் நாம் மீண்டும் மீண்டும் அந்த பாவத்திற்குள் செல்லக்கூடாது. பாவத்தை ஜெய்த்துவாழ நம் இதயம் ஆசைப்பட வேண்டும்.

## 6. சபைக்கான பிரதிபலன் (24–28)

யேசபேலின் போதகத்தை பற்றிக்கொள்ளாதவர்களும் சாத்தானின் ஆழங்கள் குறித்ததான போதகத்தை அறியாதவர்களும் அந்த சபையிலே காணப்பட்டார்கள். அவர்களுக்கு கர்த்தர் கொடுக்கிற பிரதிபலனை குறித்து குறிப்பிடுகிறார்.

a. **உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன் (2:24).**

தவறான உபதேசத்தை கைக்கொண்டவர்களை கட்டில்கிடையாக்கினதுபோல உனக்கு பாரமானதொன்றையும் நான் சுமத்த மாட்டேன் என்கிறார்.

b. **ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன் (2:26).**

உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு (லூக்கா 19:17). அவருடைய சித்தத்தைச் செய்வதே இந்த ஆளுகை. நாம் கிறிஸ்துவின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படுவோம். அவரே நம்முடைய எஜமானனாக இருப்பார்.

c. **"இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்"**

இது விதிமுறைகள் மிகவும் கடுமையாக இருக்கும் என்பதை காட்டுகிறது. எப்படி ஒரு மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை நேர்வழியில் நடத்துவதற்கு தடியை உபயோகப்படுத்துகிறானோ அதுபோல மனிதர்களுக்கு ஏற்றார்போல வளைந்து கொடுக்காமல் அவர்களை நேர்மையான வழியில் நடத்துவதற்கு இந்த கோலானது பயன்படுத்தப்படும்.

d. **"விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன்"**

இயேசுகிறிஸ்து பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாக இருக்கிறார். தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு தன்னையே கொடுப்பதாக அவர் உறுதியளிக்கிறார். ஏற்கனவே விடிவெள்ளி நட்சத்திரம் நம் இதயத்தில் உதித்திருந்தாலும் (2 பேதுரு 1:19), ஒருநாள் நாம் அவருடைய முழுமையில் இருப்போம்.

இந்த செய்தி தியத்தீரா சபைக்கு மட்டுமல்ல, சபைகளுக்கு என்று பன்மையில் சொல்லப்பட்டுள்ளதை கவனியுங்கள் (2:29). ஆகவே, நம்முடைய இருதயத்தின் காதுகளைத் திறந்து, அவருடைய வார்த்தைகளை கேட்டு அதற்கு கீழ்ப்படிவோம்.

## E. சர்தை சபை – செத்த சபை (வெளி 3:1–6)

### 1. சர்தை பட்டணம்

- சர்தை பட்டணமானது ஆசியா மைனரின் மிகப் பழமையான மற்றும் மிக முக்கியமான நகரங்களில் ஒன்றாகும்.
- கிமு 549 வரை இந்த நகரம் லீசியாவின் இராச்சியத்தின் தலைநகரமாக இருந்தது.
- இந்த நகரமானது 'டிமோலஸ்' மலையின் வடக்கு சரிவில் இருந்தது. இதன் அடிவாரத்தில் 'பாக்டோலஸ்' நதி பாய்ந்தது.
- இந்நகரத்தின் செழிப்புக்கு பாக்டோலஸ் நதியின் மணலில் காணப்பட்ட தங்கமும் ஒரு காரணமாக இருந்தது. மேலும் அவற்றை சுற்றிலும் ஏராளமாக வயல்களையும் காணலாம்.
- அநேக முறை இந்த நகரமானது எதிரிகளால் அழிக்கப்பட்டாலும் அதனுடைய செழிப்பு நிமித்தமாக உடனடியாக திரும்பவும் கட்டப்பட்டது.
- கி.பி 1402 ஆம் ஆண்டு வரை இந்த நகரம் தொடர்ந்து செழித்தோங்கியது, அது ஒருபோதும் திரும்ப கட்டப்படாத அளவிற்கு 'டேமர்லேன்' என்பவனால் முற்றிலுமாக அழிக்கப்பட்டது.
- அக்ரோபோலிஸ் மலையின் அடிவாரத்தில் இருந்த கட்டிடங்களின் இடிபாடுகளில் 'சைபெல்' என்னும் கோயில் மிகவும் சபிரசித்திப்பெற்றது; இருப்பினும் அதன் பல கல் நெடுவரிசைகளில் இரண்டு மட்டுமே இன்றும் நிற்கின்றன.

### 2. சர்தை சபையில் கிறிஸ்து

தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது:

இங்கே ஏழு நட்சத்திரங்கள் என்பது சபையினுடைய 7 தூதர்களை (சபையின் மூப்பர்கள்) குறிப்பதாகவும் ஏழு ஆவிகள் என்பது பொதுவாக பரிசுத்த ஆவியானவரை (அல்லது) அவரின் பன்முகத் தன்மையையோ அல்லது சபையில் காணப்படுகிற அவருடைய ஊழியத்தையோ குறிப்பதாக இருக்கலாம்.

ஆக, சபையும் சபையின் மூப்பர்களும், ஊழியங்களும் தேவனுடையது; அதை எந்த ஒரு தனிமனிதனும் உரிமை கொண்டாடமுடியாது.

### 3. சர்தையின் விசுவாசிகள்

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் (வச.1).

அவர்களுடைய கிரியைகள் தேவனுக்குமுன்பாக நிறைவுள்ளவைகளாக காணப்படவில்லை (வச.2). காரணம் அவர்கள் செயலற்றவர்களாக செத்த நிலையில் காணப்பட்டார்கள் (வச.1,2).

இந்த சபையைக்குறித்து பாராட்டி பேசுவதற்கு எதுவுமில்லை. ஆண்டவர் சொல்லுகிறார்: நீ உயிருள்ளவனாக பெயர்கொண்டிருகிறாய் ஆனால் செயலில் செத்தவனாக இருக்கிறாய். இன்றைக்கும் நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்தவன் என்ற பெயரோடு காணப்படலாம் ஆனால் நம்முடைய செயல்கள் தேவனுக்குப் பிரியமில்லாததாக காணப்படுகிறது.

இந்த சர்தை சபையை போலத்தான் இந்த நாட்களிலே சபையானது காணப்படுகிறது. நம்மில் பலருக்கு ஆவியின் வரங்கள் உள்ளன, ஆனால் இன்று அதை

செயல்படுத்துவது இல்லை. நாம் முறையாக தேவாலயத்திற்கு செல்வதை தேவன் விரும்பவில்லை, ஏனெனில் இது வாரத்திற்கு ஒரு முறை நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. நாம் அனுதினமும் அவருடன் உறவு கொள்வதை நாம் எதிர்நோக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

2 தீமோத்தேயு புத்தகத்தில் அதைக் குறித்து நாம் காணலாம். மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக (2 தீமோ 3:1). தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள் (2 தீமோ 3:5).

4. சர்தை சபைக்கு கிறிஸ்துவின் செய்தி

a. **நீ விழித்துக்கொண்டு** (3:2)

இங்கே தேவன் சபைக்கு கொடுக்கிற முதல் செய்தி விழித்துக்கொள் என்று சொல்கிறார். கிறிஸ்து நம்மை பிரகாசிக்கவேண்டும் என்று சொன்னால் நாம் முதலாவது விழித்திருக்கிறவர்களாக காணப்படவேண்டும். அதனுடைய பொருள் எப்பொழுதும் தேவனுடைய காரியங்களுக்கு ஆயத்தமாக இருக்கவேண்டும்.

ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார் (எபே 5:14).

b. **சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து** (3:2)

ஒருவேளை நம்முடைய வாழ்க்கையிலே இன்னும் சில காரியங்களில் பின்தங்கியவர்களாக இருப்போம் என்று சொன்னால் அப்படிப்பட்ட காரியங்களை நாம் ஸ்திரப்படுத்தப்படுத்த வேண்டும். அப்படி நாம் நிலைத்து நிற்பதற்கு நமக்கு உதவியாக இருப்பது வேத வசனமும் ஜெபமும்.

c. **நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து** (3:3)

ஆண்டவர் இங்கே நினைவுகூரும்படியாக ஒரு காரியத்தைச் சொல்லுகிறார் அது என்னவென்றால்: நீ வேத வசனத்தைக் கேட்டு அதை ஏற்றுக்கொண்ட விதம் எப்படிப்பட்டது என்பதையோ அல்லது அவர்கள் கேட்டு பெற்றுக்கொண்ட வாக்குத்தத்தமோ அல்லது வரங்கலாகவோ இருக்கலாம். இவைகளை அவர்கள் எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பது முக்கியம். அதை நினைவுகூறு என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

d. **அதைக் கைக்கொண்டு** (3:3)

கேட்டது மாத்திரமல்ல கேட்ட வசனத்தை கைக்கொள்ளவேண்டும் என்பதைத்தான் ஆண்டவர் விரும்புகிறார் இன்றைக்கு அநேகர் நாம் வசனத்தை கேட்கிறோம் ஆனால் அதன்படி நடப்பது இல்லை. நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக்கோபு 1 22). நாம் வேத வசனத்தை நாம் கடைபிடிக்காத பட்சத்தில் நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாக காணப்படுவோம்.

e. **மனந்திரும்பு** (3:3)

இன்றைக்கு அநேக சமயங்களில் இந்த மனம் திரும்புதல் என்பது கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு என்று நினைக்கிறோம் ஆனால் ஆண்டவர் அதிகமாக சபைக்கு அதாவது கிறிஸ்துவை அறிந்தவர்களுக்குத்தான் அதிகமாக சொல்கிறார். பாவம் செய்கிற ஒவ்வொருவருக்கும் (அல்லது) வேத வசனத்தை விட்டு தவறுகிற அனைவருக்கும் தேவன் கொடுக்கிற ஒரு எச்சரிப்பின் செய்தி மனந்திரும்பு என்பதே. நாம் செய்கிற பாவத்திலிருந்து மனஸ்தாபப்பட்டு அதிலிருந்து வெளியே வரவேண்டும் என்பதைதான் அவர் விரும்புகிறார்.

5. <u>தேவன் இந்த சபைக்கு கொடுக்கக்கூடிய எச்சரிப்பு</u>

நீ மனம்திரும்பாவிட்டால் அல்லது விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய் (வச.3)

திருடனைப் போல வருவேன் என்று அவர் சொன்னது அவர் வரும்வேளை நமக்கு தெரியாதிருப்பதினாலே நாம் விழித்திருக்கவேண்டியது அவசியம் என்பதை குறிக்கிறது.

6. <u>சர்தை சபைக்கு கர்த்தர் கொடுக்கக்கூடிய பிரதிபலன்</u>

ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு (வெளி 3:4) அதனுடைய பொருள்: கர்த்தருக்காக தங்களை அர்ப்பணித்து பரிசுத்தமாய் வாழ்ந்தவர்களுக்கு ஆண்டவர் கொடுக்கக்கூடிய பிரதிபலனை கீழே குறிப்பிடுகிறார்.

a. **வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்.**

வெண்வஸ்திரம் பரிசுத்தத்தையும் தூய்மையையும் பேசுகின்றன. இத்தகைய வெண்வஸ்திரம் கிறிஸ்துவுக்கும் (மத் 17: 2; மாற்கு 9: 3 – மறுரூப மலையில் அவருடைய வஸ்திரம் வெண்மையாய் பிரகாசித்தது), பரிசுத்த தேவதூதர்களுக்கும் (மத் 28:3; மாற்கு 16:5 – கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிற்பாடு அவருடைய கல்லறையில் அமர்ந்திருந்த தூதருடைய வஸ்திரம் வெண்மையாக இருந்ததை பார்க்க முடியும்), மணவாட்டியாகிய சபைக்கும், (19:8) பரலோகத்திலுள்ள சேனைகளுக்கும் இந்த வஸ்திரம் (19:14) கொடுக்கப்படுகிறது. இந்த வஸ்திரம் அவர்களுடைய நீதிகள் என்று வேதம் குறிப்பிடுகிறது. தீட்டுப்பட்ட ஆடை (வாழ்க்கை) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் கழுவப்படாத ஒன்று. ஆகவே பிரியமானவர்களே! இந்த நேரத்திலே உங்களுடைய வாழ்க்கையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக அர்ப்பணிக்கும்போது அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே உன்னுடைய பாவங்களை கழுவி பரிசுத்தமாக்கி நீதியின் ஆடையை உங்களுக்கு கொடுக்கிறார்.

b. **ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல்,**

ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடமாட்டேன். ஆகவே, நித்திய ஜீவனைப் பெற்றவர்களுடைய பெயர்களை எந்த சூழ்நிலையிலும் அவர் அழிக்க மாட்டார். இது தேவன் நமக்கு கொடுக்கக்கூடிய மிகப் பெரிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். அதுவே பிரியமானவர்களே உங்களுடைய பெயர்கள் பரலோகத்தில் எழுதப்படவேண்டும் என்று சொன்னால் உங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்த ஆட்டுக்குட்டியாவருடைய இரத்தத்தினால் நீங்கள் கழுவப்படவேண்டும்.

c. **என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் (வெளி 3:5).**

நாம் கிறிஸ்துவை மனிதர்களுக்கு முன்பாக அறிக்கை செய்யும்போது கிறிஸ்து தேவனுக்கு முன்பாக நமது பெயரை அறிக்கை செய்வார்.

நாம் இப்படி அறிக்கை செய்வது அதாவது கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ரோஜா பூக்களின் படுக்கை அல்ல, அது ஒரு யுத்தக்களம். இயேசுகிறிஸ்து இந்த போரை வென்றார். நாமும் ஜெயிக்கிறவர்களாக இந்த கிறிஸ்தவ வாழ்க்கையின் போராட்டத்தை போராடி ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்வோம். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக! ஆமென்.

## F. பிலதெல்பியா சபை – விசுவாசமுள்ள சபை (வெளி 3:7–13)

### 1. பிலதெல்பியா நகரம்

- இந்தப்பட்டணம் சர்தையிலிருந்து தென்கிழக்காக 25 மைல் தொலைவில் அமைந்துள்ளது.
- ஆசியா மைனரின் பல நகரங்களை விட பிலதெல்பியா பட்டணமானது தாமதமாக நிறுவப்பட்டது. நவீன துருக்கியின் கோகமஸ் ஆற்றின் அருகே அமைந்திருந்த இந்நகரமானது. பின்னர் கி.மு 189ல் நகரத்திற்கு செல்லும் நெடுஞ்சாலைகள் வரை விஸ்தாரமாக்கப்பட்டது.
- பிலதெல்பியா என்றால் 'சகோதர அன்பு' என்பது பொருளாகும்.
- பிலதெல்பியா வெகுவிரைவில் ஒரு முக்கியமான மற்றும் வசதிபடைத்த வர்த்தக மையமாக மாறியது, ஏனெனில் கடற்கரை நகரங்கள் வீழ்ச்சியடைந்ததால், அது அதிகாரத்தில் வளர்ந்தது. பைசண்டைன் காலத்திற்கு பிறகும்கூட அதன் முக்கியத்துவத்தை தக்க வைத்துக்கொண்டது.
- கட்டிடங்களின் அறையின் சுவரைச் சுற்றியுள்ள அலங்கார மோல்டிங், மற்றும் சுவரின் ஒரு பகுதி மேலும் பல நூற்றாண்டுகளான தேவாலயங்களின் அஸ்திவாரங்கள் உட்பட ஒரு சில இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன.

### 2. பிலதெல்பியாவில் கிறிஸ்து

பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது (3:7). கிறிஸ்து பரிசுத்தமுள்ளவராகவும், சத்தியமுள்ளவராகவும், தாவீதின் திறவுகோலை உடையவராகவும் தன்னை அறிமுகப்படுத்துகிறார்.

"தாவீதின் திறவுகோல்" என்பது இரண்டு முக்கியமான விஷயங்களை வெளிப்படுத்துகிறது:

- முதலாவதாக, தீர்க்கதரிசனத்தின்படி, கிறிஸ்து "தன் தகப்பனாகிய தாவீதின் சிங்காசனத்தை" பெற்றார் (லூக்கா 1:32).
- இரண்டாவதாக, பிலதெல்பியா சபையின் நலனுக்காக கதவுகளைத் திறந்து மூடுவதற்கு கிறிஸ்துவுக்கு அதிகாரம் இருந்தது. அதை யாராலும் மாற்றமுடியாது.

### 3. பிலதெல்பியாவின் விசுவாசிகள்

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே (3:8)...

பிலதெல்பியாவில் உள்ள "விசுவாசிகள்" எண்ணிக்கையில் அல்லது பொருள் வளங்களில் சிறியதாக இருந்திருக்கலாம், ஆனால் தேவனுடைய நாமத்தை மறுதலியாமல், வசனத்தைக் கைக்கொண்டவர்களாக காணப்பட்டார்கள்.

'மறுதலியாமல்' இருந்தார்கள் என்று சொல்லுவதின்மூலம் அவர்கள் பாடுகளை மேற்கொண்டிருந்தார்கள் என்பதை இதன் மூலமாக காணமுடியும். இந்த பாடுகள் கிறிஸ்துவின் போதனைகளை கடைப்பிடிக்காத ரோமானிய அரசாங்கத்திடமிருந்தும், யூத மதத்தை பின்பற்றியவர்களிடமிருந்தும், கிறிஸ்தவர் என்று கூறிக்கொண்டவர்களிடமிருந்தும் வந்ததாக இருக்கலாம்.

## 4. பிலதெல்பியா சபைக்கான செய்தி (3:10,11)

a. இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான் என்கிறார் (3:8).

"திறந்தவாசல்" என்பதை ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான வாய்ப்பாக புதிய ஏற்பாட்டின் அநேக பகுதிகள் காட்டுகின்றன. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு அப்போஸ்தலர் 14: 27–ல் பவுல் அந்தியோகியாவிலுள்ள சபைக்கு வந்து "கர்த்தர் புறஜாதியினருக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்துவிட்டார்" என்று அறிவித்தார் (1 கொரிந்தியர் 16: 9; 2 கொரிந்தியர் 2:12; கொலோசெயர் 4: 3,4).

b. இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன் (3:9).

பிலதெல்பியாவின் விசுவாசிகளை கிறிஸ்து நேசிக்கிறார் என்பதை "சாத்தானுடைய கூட்டத்தார்" (சாத்தானின் ஜெப ஆலயத்தில் உள்ளவர்கள்) புரிந்துகொள்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தாலும், இந்த சாத்தானுடைய கூட்டத்தார் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும் ஏற்கனவே கூறியது போல கிறிஸ்துவின் போதனையை பின்பற்றாத மக்களாக இருக்கக்கூடும். ஆனால் எத்தனை பாடுகள் வந்தாலும் கர்த்தர் சபையை நேசிக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

c. பிலதெல்பியாவில் உள்ள விசுவாசிகள் விடாமுயற்சியுடன் கிறிஸ்துவின் கட்டளையை கடைபிடித்ததால், அவர்கள் "உலகம் முழுவதிலும் வரும் சோதனை நேரத்திலிருந்து" காப்பாற்றப்படுவார்கள் என்று வாக்குறுதி அளிக்கிறார் (வெளிப்படுத்துதல் 3:10). ரோமானிய பேரரசரால் ஏற்பட்ட துன்புறுத்தலிலிருந்து வரும் விடுதலையை சிலர் எதிர்பார்த்திருந்தாலும், இந்த சொற்றொடரின் முதன்மை அர்த்தமானது கிறிஸ்துவின் வருகையின்போது சபையானது எடுத்துக்கொள்ளப்படும்; அதன் பிறகு வரக்கூடிய மகா உபத்திரவத்தில் சபை பங்கேற்காது என்பதை காட்டுகிறது.

d. இதோ, சீக்கிரமாய் வருகிறேன். 10ம் வசனத்தில் அவர்களுடைய விடுதலையின் நேரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 11 ஆம் வசனத்தில் கர்த்தர் சபையை எடுத்துக் கொள்ளப்படுவதற்கு வருவேன் என்கின்ற வாக்குத்தத்தத்தை குறிப்பிடுகிறார். 'இதோ' 'சீக்கிரமாய்' ஆகிய இரண்டு வார்த்தைகளை இங்கு குறிப்பிடுகிறார். இது அவருடைய நேரம் சமீபமாய் இருக்கிறது என்பதை காட்டுகிறது.

e. ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு. இது ஒரு எச்சரிப்பின் செய்தியாக இருக்கிறது. கர்த்தர் நமக்கென்று கொடுத்துள்ள பொறுப்புகள் மற்றும் வரங்களை பயன்படுத்தாதபோது அதற்கான பிரதிபலனை நாம் இழந்து போகிறவர்களாக காணப்படுவோம்.

## 5. பிலதெல்பியா சபைக்கான பிரதிபலன் (3:12)

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதியநாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.

a. என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன். தேவனுடைய ஆலயம் என்பது வரக்கூடிய '1000 வருட அரசாட்சியோ' அல்லது 'புதிய எருசலேமையோ' குறிக்ககூடியதாக இருக்கலாம். ஒரு உண்மையுள்ள விசுவாசிக்கு தேவனுக்கு முன்பாக சேவை செய்வதற்கும், தேவனால் கனத்தை பெற்றுக்கொள்வதற்கும் பாத்திரவானாக இருக்கிறான்.

b. மூன்று வகையான பெயர்கள் அவனுக்கு கொடுக்கப்படுகிறது.

- என் தேவனுடைய நாமம் – இது ஒரு விசுவாசி தேவனுக்கு சொந்தமானவன் என்பதை காட்டுகிறது.
- புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமம் – இது ஒரு விசுவாசியின் பரலோக குடியுரிமையை காட்டுகிறது.
- என் புதியநாமம் – இது ஒரு விசுவாசியானவன் கிறிஸ்துவின் உடன் சுதந்திரவாளி என்பதை காட்டுகிறது. ஆகவே அவரோடு நாமும் 1000 வருடம் அரசாளுவோம்.

## G. லவோதிக்கேயா சபை – மந்தமான சபை (3:14–22)

### 1. லவோதிக்கேயா நகரம்

- இது பிலதெல்பியாவிலிருந்து தென்கிழக்கே 45 மைல் தூரத்தில் கொலோசே மற்றும் எராப்போலி ஆகிய பட்டணங்களுக்கு அருகாமையில் இருக்கிறது.
- இது பண்டைய உலகின் பணக்கார வணிக நகரங்களில் ஒன்றாகும்.
- லவோதிக்கேயா ஒரு பிரபலமான மருத்துவப்பள்ளியை உருவாக்கி, அதில் காதுகளில் ஏற்படும் புண்களை குணப்படுத்த ஒரு களிம்பும் மற்றும் நோயுற்ற கண்களின் சிகிச்சைக்காக பயன்படுத்தப்பட ஒரு குறிப்பிட்ட பவுடரையும் தயாரித்தது.
- இங்கு வளர்க்கப்படும் கருப்பு–கம்பளி ஆடுகளிலிருந்து தயாரிக்கப்படும் ஆடைகள் இந்நகரத்தின் பண ஆதாயத்திற்கு முதன்மை ஆதாரமாக இருந்தது.
- இவர்கள் குணப்படுத்தும் கிரேக்க கடவுளான அஸ்கெல்பியஸை வணங்குவதில் பிரசித்திபெற்றவர்களாக இருந்தார்கள்.
- கி.பி 17இல் ஏற்பட்ட பூகம்பத்தால் இந்நகரம் அழிக்கப்பட்டது. மனிதனுடைய மற்றும் அரசின் உதவியை மறுத்த அதன் பணக்கார குடிமக்கள் தாமாகவே முன்வந்து அதை மீண்டும் கட்டினார்கள்.

### 2. லவோதிக்கேயாவில் கிறிஸ்து (3:14)

உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர்.

- இந்த சபைக்கு கிறிஸ்து 'உண்மையுள்ளவராகவும் சத்தியமுள்ளவராகவும்' வெளிப்படுத்துகிறார்.
- மட்டுமல்ல 'தேவனுடைய அனைத்து சிருஷ்டிப்புகளுக்கும் முன்பாகவே இருக்கிறவர்' என்றும்,
- ஆமென் என்றும் தன்னை வெளிப்படுத்துகிறார். 'ஆமென்' என்ற வார்த்தையானது பேச்சுவழக்கில் ஒரு வலுவான உடன்பாட்டை வெளிப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

### 3. லவோதிக்கேயா விசுவாசிகள் (3:15–17)

ஆவிக்குரிய ரீதியில் மந்தமாக இருந்தனர். லவோதிக்கேயா மக்கள் தங்களுக்கு எதுவும் தேவையில்லை என்று உணர்ந்தனர்.

- அவர்கள் தங்கள் செல்வத்தைப் பற்றி பெருமையாகப் பேசினார்கள், ஆனாலும் அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் ஏழைகளாக இருந்தார்கள். (செல்வந்தர் ஒருவர் தாழ்மையுடன் இருப்பதும், தேவன் விரும்புகிற காரியத்தை உணர்ந்து அவருக்கு பிரியமாய் வாழ்வதும் மிகவும் கடினம்).
- அவர்கள் கண்பார்வை சிகிச்சைக்கு பிரபலமானவர்கள் என்றாலும், அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் பார்வையற்றவர்கள்.
- அவர்கள் கம்பளி விற்பனைக்கு பெயர் பெற்றவர்கள், ஆனால் ஆவிக்குரிய ரீதியில் நிர்வாணமாக இருந்தார்கள்.

4. சபைக்கான எச்சரிக்கை

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன் (3:15,16).

i. இந்நகரத்தின்அருகிலுள்ள எராப்போலிஸின் சூடான நீர் மருத்துவ குணங்களுக்காக அறியப்பட்டது, அதேசமயம் கொலோசேயின் குளிர்ந்தநீர் தூய்மைக்காக அறியப்பட்டது. ஆனால் லவோதிக்கேயா மற்ற பகுதியிலுள்ள நீர்நிலைகள் மூலம் தண்ணீரைப் பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆகவேதான் அவர்கள் குளிரும் இல்லாமல் அனலும் இல்லாமல் இருப்பதாக தேவன் குறிப்பிடுகிறார். ஒரு விசுவாசி அனலும் குளிரும் இல்லாமல் கர்த்தருக்காக வைராக்கியமாக இல்லாதபட்சத்தில் அவனை அவருடைய வாயிலிருந்து வாந்தி பண்ணிபோடுகிறார்.

ii. நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு (வெளி 3:19)

- நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார் (எபிரெயர் 12:7). கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாமல் அவர் சிட்சிக்கும்போது அவருக்குக் கீழ்ப்படிந்தால் தேவன் நம்மை உயர்த்துவார்.

iii. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான் (வெளி 3:20)

- இங்கே ஒரு வேதனைக்குரிய ஒரு காரியம்: கிறிஸ்து சபைக்கு வெளியே அதாவது ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு வெளியே நின்று ஐக்கியப்பட விரும்புகிறார். கதவு தட்டுகிற சத்தத்தைக் கேட்பதற்கு விருப்பமில்லாமல் இன்று காதுகளை மூடிக்கொள்ளகூடிய நிலைமையில் காணப்படுகிறோம். எத்தனைமுறை வேத வசனத்தை நாம் கேட்டாலும் அதற்குக் கீழ்ப்படிவதில்லை. வேதவசனத்தை நம்முடைய இருதயத்தில் பதித்து அதை நடைமுறைப்படுத்தும்போது மட்டுமே தேவன் நம்மோடுகூட ஐக்கியப்படுகிறவறாக காணப்படுகிறார்.

5. லவோதிக்கேயா சபைக்கு கிறிஸ்துவின் ஆலோசனை (3:18)

கிறிஸ்து மூன்று காரியங்களைச் செய்யும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார், நம்முடைய மந்தமான தன்மையை ஒழிக்க விரும்பினால் நாமும் செய்ய வேண்டும்.

i. "நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை வாங்கிகொள்" என்கிறார். தங்கமானது நெருப்பால் சுத்திகரிக்கப்படுகிறது. தேவனுடைய வார்த்தையானது நம்முடைய ஆன்மீக வாழ்க்கையை செம்மைப்படுத்தி, மந்தமான தன்மையை மாற்றக் கூடியதாக இருக்கிறது (கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது. சங்கீதம் 12: 6). ஆவிக்குரிய நிலையில் தரித்திரராய் இருக்கக்கூடிய சபையானது ஐசுவரியவானாக வேண்டும் என்று சொன்னால் வேதவசனம் மிகவும் அவசியமாக இருக்கிறது.

ii. உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள். நம்முடைய பாவமான அவலட்சணமான நிலையை மூடுவதற்கு தேவனுடைய நீதியான வஸ்திரம் அவசியமாக இருக்கிறது.

- முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபே 4:22–24).

iii. நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடு.

- இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார் (2 கொரி 4: 6). சபை பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்பதை (பார்வையிலே நம்முடைய சரீரத்தில் பரிசுத்தம் தேவை).
- ஆவிக்குரிய தரித்திரம் இல்லாமல் கிறிஸ்துவுக்குள்ளான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளவேண்டும் என்பதை தேவன் விரும்புகிறார்.

## 6. பிரதிபலன்

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன் (3:21).

- நாம் அவருடன் ஆட்சி செய்யும்போது கிறிஸ்து அனுபவிக்கும் பாக்கியத்தையும் அதிகாரத்தையும் பகிர்ந்துகொள்வோம் (மத் 19:28; லூக்கா 22:29 –30). இயேசு தம்முடைய சித்தத்தை பிதாவின் சித்தத்திற்கு சமர்ப்பித்தபோது உலகை வென்றார். அவர் சிலுவையில் பாவத்தையும் மரணத்தையும் வென்றார். நம்முடைய சித்தத்தை அவரிடம் சமர்ப்பிக்கும்போது நாம் ஒரு ஜெயிப்பவர்களாக இருப்போம்.
- "என் சித்தமல்ல, உமது சித்தம் ஆகட்டும்ஆண்டவரே" என்பததே ஒவ்வொரு விசுவாசியின் அறைகூவலாக இருக்கட்டும்.